டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 4.02.2026 புதன்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 187 - Madurai | Online Edition

# ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் 15.79 கோடி ஊரகப் பகுதி வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டது

புது தில்லி, பிப்.3

நாட்டின் அனைத்து ஊரக பகுதி வீடுகளுக்கும் குழாய் மூலம் குடிநீர் வழங்குவதற்கு மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசு 2019 ஆகஸ்ட் முதல் ஜல் ஜீவன் இயக்கத்தை அமல்படுத்தி வருகிறது.

இந்த இயக்கம் தொடங்கப்பட்ட போது, 2019 ஆகஸ்டில் 3.23 கோடி (16.72%) ஊரகப் பகுதி வீடுகளில் மட்டும் குழாய் மூலம் குடிநீர் இணைப்பு இருந்தது. ஆனால் தற்போது 2026 ஜனவரி 28 வரை நாட்டில் உள்ள 19.36 கோடி ஊரகப்பகுதி வீடுகளில் 15.79 கோடி (81.56%) வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தின் கீழ், செலவிடப்படும் என மதிப்பீடு செய்யப்பட்ட ரூ.3.60 லட்சம் கோடியில் ரூ.2.08 லட்சம் கோடியை மத்திய அரசு தமது பங்களிப்பாக வழங்கியுள்ளது.

இத்தகவலை மத்திய ஜல்சக்தித் துறை இணையமைச்சர் சோமண்ணா மாநிலங்களவையில் நேற்று எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்தார்.



# விதையை சேமித்து வைக்கணுமா? ஈரப்பதம் சோதனை செய்யணும்?

மதுரை, பிப்.3

நிறைவான மகசூல் பெறுவதற்கும் சேமித்து வைப்பதற்கும், விதையின் ஈரப்பதத்தை அளவிட்டு பாதுகாக்க வேண்டும் என மதுரை விதைப்பரிசோதனை அலுவலர் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

விதையின் ஈரப்பதம் பயிறுக்கு ஏற்றவாறு 7% முதல் 13% வரை இருக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட ஈரப்பதம் இருந்தால் நல்ல முளைப்புத் திறன், சீரான வளர்ச்சி மற்றும் அதிக மகசூல் கிடைக்கும். குறைவாகவோ கூடுதலாகவோ இருந்தால் விதையின் ஆயுட்காலம் முளைப்புத்திறன் குறைந்து விடும்.

விதைகள் சேமிப்பின் போது 1% ஈரப்பதம் அதிகரித்தாலும் ஆயுள் பாதியாக குறைந்து விடும். நெல்லில் 13%, சிறுதானியம் 12%, பயறுவகைகள் 11% மற்றும் எண்ணெய் வித்துக்களில் 9% ஈரப்பதம் இருப்பது அவசியம்.

விதைகள் அதிகமாக உலர்ந்தால் கடின விதைகளாக மாறிவிடும். சேமிக்கும் போது சரியான ஈரப்பதத்தில் இருந்தால் பூச்சி நோய் தாக்குதலின்றி நீண்ட காலம் சேமிக்கலாம். விவசாயிகள், வியாபாரிகள் தங்களிடம் உள்ள விதைகளின் ஈரப்பதத்தை அறிந்து கொண்டு அதன் பின் சேமித்தால் பழுதின்றி பாதுகாக்கப்படும்.

மேலும் விவசாயிகள், வேளாண் விதை உற்பத்தியாளர்கள், வேளாண் விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள விதைகளின் தரத்தை மதுரை, நாகமலைப் புதுக்கோட்டையில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- வீதம் செலுத்தி பரிசோதனை செய்து கொள்ளலாம் என விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் சி.கமலாராணி மற்றும் பெரி.இராமலெட்சுமி தெரிவித்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தேனீ வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி

கோயம்புத்தூர், பிப்.3

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிப்ரவரி 2026 மாதத்திற்கான பயிற்சி, 06.02.26 வெள்ளிக்கிழமை அன்று அளிக்கப்படும்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

- தேனீ இனங்களை கண்டுபிடித்து வளர்த்தல்
- பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம்
- தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்
- தேனைப் பிரித்தெடுத்தல்
- தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம்

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர், பயிற்சி நாளன்று காலை 9.00 மணிக்கு பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வந்து அடையாள சான்று சமர்ப்பித்து பயிற்சிக் கட்டணம் ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்)நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நேரம் : காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தொலைபேசி : 0422-6611214, மின்னஞ்சல் : entomology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# புதிய நெல் இரகம் ஆடுதுறை 59 வயல் விழா




கடலூர், பிப்.3

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண் அறிவியல் நிலையம் சார்பாக சாத்தமங்களம் கிராமம்/முஷ்ணம் ஒன்றியத்தில் வயல் விழா 02.02.26 அன்று நடைபெற்றது. புதிய நெல் இரகம் ADT – 59 உழவர் பங்களிப்புடன் விவசாயி களின் வயலில் முதல்நிலை செயல் விளக்கம் செய்யப்பட்டது. இவ்வயல் விழாவை திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன் தொடக்கி வைத்து இந்த இரகத்தின் சிறப்பியல்பு களை விளக்கினார்.

இவ்விழாவில் விருத்தாசலம் விதைசான்றளிப்பு அலுவலர், கலந்து கொண்டு, விதைபண்ணை அமைப்பதற்கு தேவையான தொழில்நுட்பங்களை விளக்கினார். ஆடுதுறை 59 இரகத்தின் சிறப்பியல்புகள் குறுவை பருவத்திற்கு ஏற்றது. ADT – 59 வகையானது ADS – 16 போன்ற சில வழக்கமான வகைகளுடன் ஒப்பிடும் போது 15 முதல் 20 சதவீதம் அதிக மகசூலை அளிக்கிறது. குறுவை சாகுபடிச் சூழல்களின் கீழ் விவசாயிகள் ஏக்கருக்கு 4,000 கிலோ கிராம் வரை அறுவடைசெய்கிறார்கள். இந்த வகைக்கு வழக்கமான இரகங்களுக்குப் பயன்படுத்தும் உர உள்ளீட்டில் 50 சதவீதம் மட்டுமே தேவைப்படுகிறது என்ப தோடு இது விவசாயிகளுக்கு செலவு குறைந்ததாக அமைகிறது. ADT – 59 ஆனது உப்புத் தன்மைமற்றும் தண்டு துளைப்பான், குலைநோய் மற்றும் இலைப்புள்ளி போன்ற பூச்சித் தாக்குதல் களுக்கு எதிராக வலுவான எதிர்ப்புத் திறனைக் கொண்டுள்ளது என்பதோடு ஆரோக்கியமானப் பயிர்களின் வளர்ச்சியை இது உறுதி செய்கிறது. 110 முதல் 115 நாட்கள் வரையிலான தானிய முதிர்ச்சி காலத்துடன், இந்த வகையானது குறுவை, நவரை மற்றும் கோடைகாலச் சாகுபடிக்கு மிகவும் பொருத்தமான தாகும். இந்த இரகத்தின் செயல்விளக்கம் இராமசந்திரனின் வயலில் செயல் விளக்கம் அமைக்கப்பட்டது. இதில் முஷ்ணம் ஒன்றியத்தில் உள்ள விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# இப்கோ நானோ டி.ஏ.பி - ஓர் பார்வை

சென்னை, பிப்.3

நானோ டி.ஏ.பி திரவ உரத்தில் 8% தழைச்சத்தும் 16% மணிச்சத்தும் உள்ளது. நானோ டி.ஏ.பியைப் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்கையில் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரியத் தன்மை அதிகரிக்கிறது. மேலும், பயிரின் வளர்ச்சி, தரம் மற்றும் மகசூலையும் அதிகரிக்கிறது.

**பயன்படுத்தும் முறை :** ஒரு மூடி நானோ டி.ஏ.பி பாட்டிலின் அளவு = 25 மி. லி.

**விதை நேர்த்தி**

ஒரு கிலோ விதைக்கு, 3-5 மி.லி நானோ டி.ஏ.பியைத் தேவையான அளவு நீரில் கலந்து விதையின் மேற்பரப்பில் ஒரு மெல்லிய படலம் போல் உருவாகச் செய்து, 25 முதல் 30 நிமிடம் வரை வைத்து, பின்பு நிழலில் உலர்த்தி விதைப்பு செய்ய வேண்டும்.

**வேர்/கிழங்கு/கரணை நேர்த்தி**


தேவையான அளவு நீரில் நானோ டி.ஏ.பி திரவத்தை,ஒரு லிட்டர் நீருக்கு, 3-5 மி.லி என்ற அளவில் கலந்து நாற்றுகள்/ கிழங்குகள்/ கரணைகளை 20 - 30 நிமிடம் ஊற வைத்து, பின்பு நிழலில் உலர்த்தி நடவு செய்ய வேண்டும்.

**இலைவழி தெளிப்பு**

2-4 மி.லி நானோ டி.ஏ.பியை ஒரு லிட்டர் நீரில் கலந்து பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களான (கிளைப்பு, துளிர்விடும்) தருவாயில் தெளிக்க வேண்டும்.




அதிகமாக மணிச்சத்து தேவைப்படும் பயிர்கள் மற்றும் நீண்டகால பயிர்களுக்கு நானோ டி.ஏ.பியை இரண்டாம் தெளிப்பாக பூக்கும் பருவத்திற்கு முன் தெளிக்கவும்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் உரங்களை வழங்கும் போது இணைப் பொருட்களை கட்டாயப்படுத்தி கொடுக்கக் கூடாது

# வேளாண் துறை எச்சரிக்கை



பெரம்பலூர், பிப்.3

பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் கண்ணனின் அறிவுரையின்படி வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் த.ராதாகிருஷ்ணன், பெரம்பலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் உரம் விற்பனை நிலையத்தை திடீர் ஆய்வு செய்தார். ஆய்வின்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் சி. பிரபாகரன் உடன் இருந்தார்.

உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயின் கையப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும்.

எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக் கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். தழைச்சத்துக்காக யூரியாவுக்கு பதிலாக நானோ யூரியா பயன்படுத்தலாம். வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

## வாழையில் பக்க கன்று நீக்குதல் குறித்து விளக்கிய வேளாண் கல்லூரி மாணவர்



மதுரை, பிப்.3

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவர் செ.சரவணன், தனது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டதின் (RAWE), ஒரு பகுதியாக திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் உள்ள விருபாச்சி கிராமத்தில், வாழை சாகுபடியில் பக்க கன்று நீக்குதல் குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தார்.

இந்த செயல்விளக்கத்தின் போது, வாழை பயிரில் தேவையற்ற பக்க கன்றுகளை சரியான நேரத்தில் நீக்குவதால் முதன்மை கன்றின் வளர்ச்சி மேம்படுவதுடன், அதிக மகசூலும் தரமான குலையும் கிடைக்கும் என்பதை அவர் விளக்கினார்.

மேலும், பக்க கன்று நீக்குதல் மூலம் உரம் மற்றும் நீர் வீணாவதை குறைக்கலாம் என்றும், நோய் மற்றும் பூச்சி தாக்குதல்களை கட்டுப்படுத்த முடியும் என்றும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

# தேங்காய் தோட்டத்தில் ரைனோசெரஸ் வண்டு மற்றும் செம்மஞ்சள் பனை வண்டு கட்டுப்பாடு குறித்த செயல்விளக்கப் பயிற்சியளித்த கல்லூரி மாணவர்கள்




நாமக்கல், பிப்.3

ஒரு தேங்காய் தோட்டத்தில், PGP வேளாண்மை கல்லூரி மாணவர்கள் சார்பில் ரைனோசெரஸ் வண்டு (Rhinoceros Beetle) மற்றும் செம்மஞ்சள் பனை வண்டு (Red Palm Weevil) தாக்குதல்களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து செயல் விளக்கப் பயிற்சி நடத்தப்பட்டது.

இந்த பயிற்சியில், உதவி வேளாண்மை இயக்குநர் (Assistant Director of Agriculture) கலந்து கொண்டு, தேங்காய் பயிருக்கு இந்த இரண்டு முக்கிய பூச்சிகள் ஏற்படுத்தும் சேதங்கள், அவற்றின் வாழ்க்கைச் சுழற்சி மற்றும் தாக்குதல் அறிகுறிகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

PGP வேளாண்மை கல்லூரி மாணவர்கள், ஃபெரமோன் வலைகள் அமைத்தல், உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள், இயற்கை எதிரிகள் பயன்பாடு மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறைகள் குறித்து நேரடி விளக்கங்களை வழங்கினர். மேலும், ரசாயன மருந்துகளை குறைந்த அளவில் பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவது குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இந்த செயல்விளக்கப் பயிற்சி, தேங்காய் உற்பத்தியை உயர்த்துவதோடு, விவசாயிகள் நவீன மற்றும் சூழலுக்கு ஏற்ற தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள உதவுவதாக அமைந்தது. நிகழ்ச்சியில் பல்வேறு விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# 2026 மத்திய பட்ஜெட்டில் விவசாயிகளுக்கான அறிவிப்புகள்

இந்த ஆண்டு மத்திய பட்ஜெட்டில் மத்திய அரசு விவசாயிகளுக்கு கடந்த ஆண்டை விட முற்றிலுமாக தனது அணுகுமுறையை மாற்றி பல்வேறு திட்டங்களை 'ஏ.ஐ தொழில்நுட்பம் தொடங்கி, ஆயுர்வேத மருத்துவ வேளாண்மை' வரை வழங்கப்பட்டுள்ளது.




மத்திய நிதியமைச்சராக உள்ள நிர்மலா சீத்தாராமனால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

1) அரிசி, கோதுமையை மட்டும் சார்ந்திருக்காமல் 'உள்ளூர் முதல் உலகம் வரை' என்ற மந்திரத்தை அடிப்படையாக கொண்டு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

2) இந்தியாவின் புவியியல் பன்முகத்தன்மை அதனுடைய மிகப்பெரிய பலம் ஆகும். இதை அங்கீகரிக்கும் வகையில், மத்திய அரசு இரண்டு தனித்துவமான புவியியல் பகுதிகளுக்கு குறிப்பிட்ட திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

**கடலோர பகுதிக்கான திட்டம்?**

கடலோர மாநிலங்களில் அதிகமாக பயிரிடப்படுவது தென்னை, முந்திரி. அந்த பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன் பெறும் வகையில் இப்போது நேரிடையாக நிதி நன்மைகள் பெறுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தென்னையில் HIGH INTENSITY PLANTATION SCHEME கொண்டு வரப்படும்.

இந்திய அளவில் முந்திரிக்கென உலகளவில் தனி பிரீமியம் பிராண்ட்–டாக மாற்றுவதே அரசின் குறிக்கோளாக உள்ளது. இது ஏற்றுமதி அதிகரிப்பது மட்டுமல்லாமல் கடலோர மாநிலங்களில் உள்ள விவசாயிகளுக்கு அதிக வருமானத்தை தரும் என்று கூறப்பட்டுள்ளது.

**தோட்டக்கலை பயிர்கள்?**

காஷ்மீர் முதல் இமாச்சல பிரதேசம் வரை வால்நட், பாதாம் பயிரிடும் விவசாயிகளுக்கு பரப்பு ஊக்க தொகை தொகுப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடினமான பகுதி களில் பயிரிடும் விவசாயிகளுக்கு சிறந்த போக்குவரத்து வசதி (LOGISTICS FACILITIES) மற்றும் சந்தை வாய்ப்பு (MARKET FACILITIES) ஏற்படுத்திட முடியும் என பட்ஜெட்டில் தெரிவிக்கபட்டு உள்ளது.

**கோகோ மற்றும் சந்தன மர சாகுபடி?**

சாக்லேட் துறையில் கோகோ–வின் தேவை அதிகமாக இருப்ப தால், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதை தவிர்க்க, உள்ளூர் உற்பத்தி அதிகரிக்க இந்த நடவடிக்கை உதவும். அதுமட்டுமல்ல சந்தன மரம், இந்தியாவின் தேசிய அடையாள மாக உள்ளது. இதை ஒரு முக்கிய பயிராக மாற்றுவதே அரசின் திட்டமாக உள்ளது.

தொழில்நுட்பம் (ARTIFICIAL INTELLIGENCE) ( BHARAT VISTAR ) பாரத் விஸ்தார் 'என்ற ஏ.ஐ தொழில்நுட்ப த்தை பயன்படுத்தி தங்களுடைய வட்டார மொழிகளில் விவசாய ஆலோசனைகள் பெறலாம்.

விவசாயிகள் பழமையை நம்பி இருக்காமல் விவசாயத்தை செயற்கை நுண்ணறிவுடன் ஒருங்கிணைக்க இந்த பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியிடப்பட்டது தான் பாரத் விஸ்தார் 'வானிலை, பயிர் பூச்சி நோய் மேலாண்மை மற்றும் சந்தை வாய்ப்புகள் பற்றிய துல்லியமான தகவல்கள் பெறலாம். பயிருக்கு எப்போது உரமிடுவது, நீர்ப்பாசன வசதி எப்போது மேற்கொள்ளுவது A.I தீர்மானிக்க உதவும். இதனால் செலவுகள் குறைந்து உற்பத்தி அதிகரிக்க உதவும்.

**மருத்துவ வேளாண்மை**

உலக அளவில் ஆயுர்வேத மருத்துவ முறை அதிகரித்து வருவதால் அதற்கு தேவையான மூலிகை செடிகள் உற்பத்தி தேவை அதிகமாக இருப்பதால், மூலிகை செடி சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கவும், ஏற்றுமதி செய்யப் படும் மூலிகைகளால் நேரடியான நன்மைகள் விவசாயி களுக்கு கிடைக்கும்.

மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையில், வேளாண் சார்ந்த துறைக்கு வெறும் 3% நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது 1,62,671 கோடி நாட்டில் 15% முதல்18% உள்நாட்டு உற்பத்தியில் பங்களிப்பு செய்யும் வேளாண் துறைக்கு இந்த நிதி போதுமான தல்ல என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# கொய்யா பயிரில் வின் பதியம் போடுதல் குறித்த செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.3

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டாரம், மணப்பள்ளி கிராமம், பி.ஜி.பி. வேளாண் அறிவியல் கல்லூரியில் பயிலும் வேளாண்மை அறிவியல் மாணவிகள், தங்களது கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, விவசாயிகளுக்கு கொய்யா பயிரில் வின் பதியம் போடுதல் (Air Layering) முறையைப் பற்றிய கள விளக்கத்தை நடத்தினார்.

இந்நிகழ்ச்சியின் மூலம், கொய்யா பயிரை பெருக்குவதற்கான எளிய, குறைந்த செலவிலான மற்றும் அதிக வெற்றிவிகிதம் கொண்ட வின் பதியம் போடுதல் (ஏர் லேயரிங்) முறையை மாணவிகள் விவசாயிகளுக்கு நேரடியாக செய்முறை விளக்கமாக எடுத்துரைத்தனர். கொய்யா மரத்தில் ஆரோக்கியமான கிளையைத் தேர்வு செய்வது, பட்டையை அகற்றும் முறை, ரூட்டிங் ஹார்மோன் பயன்படுத்தும் விதம், மண் கலவை சுற்றி பிளாஸ்டிக் மூடுதல் மற்றும் வேர்கள் உருவாகும் கால அளவு போன்ற அனைத்து நடைமுறைகளையும் தெளிவாக விளக்கினர். மேலும், இந்த முறையின் மூலம் குறைந்த காலத்தில் தரமான நாற்றுகளை உருவாக்க முடியும், தாய் மரத்தின் பண்புகளை முழுமையாகக் கொண்ட புதிய செடிகளைப் பெறலாம் என்றும், இது விவசாயிகளுக்கு அதிக லாபம் தரும் தாவர பெருக்க முறையாகும் என்றும் மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

இந்த கள விளக்கத்தில் கலந்துகொண்ட விவசாயிகள், வின் பதியம் போடுதல் (ஏர் லேயரிங்) முறை எளிமையானதாகவும் பயனுள்ளதாகவும் இருப்பதாக கருத்து தெரிவித்ததுடன், இனி தங்களது தோட்டங்களில் இம்முறையைப் பயன்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தனர். இந்தப் பயிற்சி, விவசாயிகளிடையே புதிய தொழில்நுட்பங்களை கொண்டு செல்லும் மாணவர்களின் முயற்சியாக பாராட்டைப் பெற்றது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மாசி பட்ட எள் சாகுபடி



பெரம்பலூர், பிப்.3

பெரம்பலூர் மாவட்டத்தில் மாசி பட்டத்தில் எள் சாகுபடி செய்யப்படுகிறது. எள் சாகுபடியானது சுமார் 350 முதல் 400 ஹெக்டர் பரப்பளவில் மேற்கொள்ளப் படுகிறது. பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் கிணறு களில் உள்ள நீரை பயன் படுத்தி எள் சாகுபடி செய்ய ஏற்ற இரகங்கள் டி.எம்.வி-3, டி.எம்.வி-4, டி.எம்.வி-6, டி.எம்.வி-7, கோ-1, வி.ஆர்.ஐ (எஸ்.வி)-1, வி.ஆர்.ஐ (எஸ்.வி)- 2 மற்றும் எஸ்.வி.பி.ஆர்-1 (வெள்ளை) ஆகும்.

ஏக்கருக்கு இரண்டு கிலோ தரமான மற்றும் சுத்தமான விதைகளை தேர்வு செய்து அசோஸ்பைரில்லம் 200 கிராம், பாஸ்போபாக்டிரியா 200 கிராம் மற்றும் டிரைக்கோடர்மா விரிடி 8 கிராம் கொண்டு விதை நேர்த்தி செய்து விதைக்கவும். தழை, மணி, சாம்பல் சத்து முழுவதையும் அடியுரமாக அளிக்க வேண்டும். ஏக்கருக்கு 2 கிலோ மாங்கனீஸ் சல்பேட்டை இவற்றுடன் சேர்த்துக்கொள்வதால் நுண் சத்து பற்றாக் குறையை நீக்குவதுடன் திறட்சியான எள் விதைகளை பெறலாம்.

தரமான எள் விதை என்பது குறைந்தபட்சம் 80 சதவீதம் முளைப்புத்திறனும், அதிகபட்சமாக 9 சதவீதம் ஈரப்பதமும், குறைந்தபட்சமாக 97 சதவீதம் புறத்தூய்மையும் இருத்தல் அவசியம். ஆகவே எள் விவசாயிகள் விதைப்பிற்கு முன்பு விதைப்பரிசோதனை செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை நிலையமானது பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு கிழக்கு பகுதியில் மாவட்ட மைய நூலகம் அருகில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் விதைகளின் தரத்தை அறிந்திட தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன்,

ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிற இரக கலப்பு ஆகியவை பரிசோதனை செய்யப்பட்டு ஆய்வறிக்கை வழங்கப்பட்டு வருகிறது.

2025-2026ம் ஆண்டிற்கு 2667 இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 2166 விதை மாதிரிகள் பரிசோதனை செய்து முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 156 விதை மாதிரிகள் தரமற்றவை என கண்டறியப்பட்டுள்ளது.

விதை பரிசோதனை நிலையத்தில் ஒரு பணி விதை மாதிரிக்கு ரூ.80/- பரிசோதனை கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச் சீட்டுகளுடன், எள் விதை 25 கிராம் அளவிற்கு விதை மாதிரி எடுத்து அனுப்பி விதைகளை பரிசோதனை செய்து கொள்ளலாம் என பெரம்பலூர் விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் இச்செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளனர்.

# தேசிய விதை பரிமாற்று தின விழா கொண்டாட்டத்தில் வேளாண் கல்லூரி மாணவிகள்



ஈரோடு, பிப்.3

ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டம், இருகாலூர் கிராமத்தில், தேசிய விதை பரிமாற்று தினம் ஜனவரி 31 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இறுதியாண்டு பயிலும் மாணவிகளால் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆடி பட்டம் தேடி விதைப்பது போல, பாரம்பரிய விதைகளைப் பாதுகாத்து, விவசாயிகளுக்குள் பரிமாறிக் கொள்ளும் நோக்கில் இந்த விழா நடைபெற்றது. விழாவில், இருகாலூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த 30 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். இறுதியாண்டின் முதற் பகுதியாக கிராமப்புற விவசாயப் பணி அனுபவத்தின் கீழ் நம்பியூர் பகுதியில் தங்கி விவசாயிகளிடம் இருந்து கற்றும், விவசாயிகளுக்கு கற்பித்தும் வருகின்றனர். முதியோர் முதல் இளைஞர்கள் வரை, தங்களின் பாரம்பரியமான மாப்பிள்ளை சம்பா, பூங்கார், சீரகச் சம்பா, கருப்பு கவுனி போன்ற பாரம்பரிய நெல் ரகங்களையும், பலவகையான சிறுதானியங்கள் மற்றும் காய்கறி விதைகளையும் ஒருவருக் கொருவர் பரிமாறிக் கொண்டனர்.

# கார்பன் விவசாயம் [Carbon Farming] – விவசாயிகளுக்கான புதிய வருமானமும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்

**முன்னுரை :** இன்றைய காலத்தில் காலநிலை மாற்றம் உலகளாவிய பிரச்சினையாக மாறியுள்ளது. இதற்கு முக்கிய காரணமாக அதிகரித்து வரும் கார்பன் டை ஆக்சைடு ($CO_2$) போன்ற பசுமைக் குடில் வாயுக்கள் இருக்கின்றன. இந்த நிலையில், விவசாயம் மூலம் கார்பனை குறைத்து சுற்றுச்சூழலை பாதுகாக்கும் புதிய முறையாக கார்பன் விவசாயம் (Carbon Farming) உருவெடுத்துள்ளது. இது விவசாயிகளுக்கு கூடுதல் வருமான வாய்ப்பையும் உருவாக்குகிறது.

**கார்பன் விவசாயம் என்றால் என்ன?**

கார்பன் விவசாயம் என்பது, விவசாய நிலங்களில் கார்பனை உறிஞ்சி மண்ணில் சேமிக்கும் நடைமுறைகளைக் குறிக்கும். இதன் மூலம் வளிமண்டலத்தில் உள்ள கார்பன் அளவு குறைக்கப் படுகிறது. இந்த கார்பன் சேமிப்புக்கு பதிலாக விவசாயிகள் Carbon Credit மூலம் வருமானம் பெற முடியும்.

**கார்பன் விவசாயத்தில் பயன்படுத்தப்படும் முக்கிய நடைமுறைகள்**

**1. இயற்கை மற்றும் குறைந்த உழவு (Minimum / Zero Tillage)**

அதிக உழவு மண்ணில் உள்ள கார்பனை வெளியேற்றும். குறைந்த உழவு முறைகள் மண்ணில் கார்பனை பாதுகாக்க உதவுகின்றன.

**2. பசுந்தழை உரங்கள் மற்றும் கவர் பயிர்கள் (Cover Crops)**

பசுந்தழை உரங்கள் மண்ணில் கரிமப்பொருள் அளவைக் கூட்டி, கார்பன் சேமிப்பை அதிகரிக்கின்றன.

**3. இயற்கை உரங்கள் பயன்பாடு**

கம்போஸ்ட், பண்ணை உரம் (ய்க்ஷுனி), வெர்மிகம்போஸ்ட் போன்றவை மண்ணின் கரிம கார்பன் அளவை உயர்த்துகின்றன.

**4. மர அடிப்படையிலான விவசாயம் (Agroforestry)**

பயிர்களுடன் மரங்களை வளர்ப்பது, அதிக அளவில் கார்பனை உறிஞ்ச உதவுகிறது.

**5. பயிர் எச்சங்களை எரிக்காமல் மண்ணில் கலத்தல்**

பயிர் எச்சங்களை எரிப்பதை தவிர்த்து, அவற்றை மண்ணில் கலப்பது கார்பன் சேமிப்பை அதிகரிக்கிறது.

**விவசாயிகளுக்கு கிடைக்கும் நன்மைகள்**

மண்ணின் வளம் மற்றும் நீர்த்திறன் அதிகரிப்பு, நீண்டகால விளைச்சல் நிலைத்தன்மை, உரம் மற்றும் நீர் செலவு குறைவு, Carbon Credit மூலம் கூடுதல் வருமானம், காலநிலை மாற்றத்துக்கு எதிரான பாதுகாப்பு.

**கார்பன் கிரெடிட் (Carbon Credit) என்றால் என்ன?**

ஒரு விவசாயி தனது நிலத்தில் சேமிக்கும் கார்பன் அளவின் அடிப்படையில் வழங்கப்படும் சான்றிதழே Carbon Credit. இந்த கிரெடிட்களை தொழில்துறைகள் மற்றும் நிறுவனங்கள் வாங்குவதன் மூலம், விவசாயிகள் வருமானம் பெறுகின்றனர்.

**கார்பன் விவசாயத்தில் உள்ள சவால்கள்**

கார்பன் அளவை அளவிடும் முறைகள் சிக்கலானவை, திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு குறைவு. ஆரம்ப கட்டத்தில் உடனடி வருமானம் கிடைக்காமை, தொழில்நுட்ப மற்றும் பதிவு (documentation) சிக்கல்கள், அரசு மற்றும் நிறுவனங்களின் பங்கு.

கார்பன் விவசாயத்தை ஊக்குவிக்க அரசு மானியங்கள், பயிற்சிகள் மற்றும் விவசாயிகளுக்கான எளிய பதிவு முறைகளை கொண்டு வர வேண்டும். தமிழில் தகவல் மற்றும் ஆலோசனை கிடைப்பது மிகவும் அவசியம்.

**முடிவுரை** : கார்பன் விவசாயம் என்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பையும், விவசாயிகளின் வருமான உயர்வையும் ஒரே நேரத்தில் வழங்கும் நிலைத்த விவசாய முறையாக உள்ளது. சரியான வழிகாட்டல் மற்றும் ஆதரவு கிடைத்தால், இந்திய விவசாயத்தின் எதிர்காலத்தில் கார்பன் விவசாயம் முக்கிய பங்கு வகிக்கும்.

தகவல் : மேலும் விவரங்களுக்கு **ரா.அபிநயா, இளங்கலை வேளாண் மாணவி மற்றும் முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர், வேளாண் விரிவாக்க துறை, சு.சந்தியா, உதவி பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், நாளந்தா வேளாண்மை கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna 8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

# விவசாயிகளுக்கு எருக்கு கரைசல் தயாரிப்பு குறித்து கள விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.3

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டாரம், மணப்பள்ளி கிராமத்தில், பி.ஜி.பி. வேளாண் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவிகள் விவசாயிகளுக்கு எருக்கு கரைசல் தயாரிப்பு குறித்து கள விளக்கத்தை நடத்தினர். இந்த நிகழ்ச்சியின் போது, எருக்கு இலை கரைசல் (Calotropis leaf extract) என்பது போரான் சத்து நிறைந்த ஒரு சிறந்த இயற்கை பூச்சி விரட்டி மற்றும் திரவ உரம் என்பதை மாணவர்கள் விளக்கினர். எருக்கு கரைசல் தயாரிக்கும் முறையாக, 10 கிலோ எருக்கு இலைகளை 200 லிட்டர் தண்ணீரில், 1 கிலோ நாட்டு சர்க்கரை சேர்த்து, 30 நாட்கள் ஊறவைத்து, 3 நாட்களுக்கு ஒருமுறை நன்கு கிளறி தயாரிக்க வேண்டும் என விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், இந்த கரைசல் பூ உதிர்வதைத் தடுக்கும், தென்னை உள்ளிட்ட பல பயிர்களில் விளைச்சலை அதிகரிக்கும் என மாணவர்கள் தெரிவித்தனர். இந்த கள விளக்கத்தில் கலந்து கொண்ட விவசாயிகள், இயற்கை முறையில் பயிர் வளர்ச்சியை மேம்படுத்த உதவும் இந்த கரைசல் குறித்து ஆர்வம் காட்டினர்.

# மார்க்கையன்கோட்டையில் விவசாயிகளுக்கு தாவர அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் குறித்த பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவி



தேனி, பிப்.3

தேனி மாவட்டம், மார்க்கையன் கோட்டை பகுதியில், வேளாண்மை கல்லூரியின் இறுதியாண்டு மாணவி மகாலட்சுமி, RAWEP (Rural Agricultural Work Experience Programme) திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் செயல்விளக்கக் காட்சியை நடத்தினார்.

இந்நிகழ்ச்சியில், பயிர்களில் ஏற்படும் பூச்சி தாக்குதலை கட்டுப்

படுத்த தாவர அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் (Botanical Pestici es) பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. வேப்பிலை, வேப்பெண்ணெய், பூண்டு, மிளகாய், இஞ்சி போன்ற இயற்கை மூலப்பொருட்களை கொண்டு பூச்சிக்கொல்லிகள் தயாரிக்கும் முறை குறித்து நடை முறையில் செய்து காட்டப்பட்டது.

தாவர அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்துவதன் மூலம், பயிர்களுக்கு ஏற்படும் சேதம் குறைவதோடு, மண்ணின் வளமும் பாதுகாக்கப்படும் என்றும், மனிதர்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு இல்லாத பாதுகாப்பான முறையாக இது விளங்கும் என்றும் மாணவி மகாலட்சுமி விளக்கினார். மேலும், இந்த முறைகள் செலவு குறைவாகவும், விவசாயிகளால் எளிதில் தயாரித்து பயன்படுத்தக்கூடியதாகவும் இருப்பதாக தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், இந்த பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும், எதிர்காலத்தில் தங்கள் வயல்களில் தாவர அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். இவ்வகையான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள், நிலைத்த மற்றும் இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன என விவசாயிகள் பாராட்டினர்.

## வெர்மி கம்போஸ்ட் பயிற்சியளித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வேளாண் கல்லூரி மாணவி



தேனி, பிப்.3

தேனி மாவட்டம், சின்னமனூர் வட்டாரம், அப்பிப்பட்டி கிராமத்தில் விவசாயிகள் மற்றும் கிராம மக்களுக்காக வெர்மிகம்போஸ்ட் (மண்ணெச்சு உரம்) தயாரிப்பு குறித்த பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சி மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மதுரை வேளாண்மை கல்லூரி மாணவி ஜனனி கலந்து கொண்டு, வெர்மிகம்போஸ்ட் தயாரிப்பு முறைகள், தேவையான மூலப்பொருட்கள், மண்ணெச்சு பராமரிப்பு மற்றும் உரத்தின் பயன்கள் குறித்து விளக்கினார். இயற்கை உரம் பயன்பாட்டின் மூலம் மண் வளம் மேம்பட்டு, விவசாயச் செலவுகள் குறையும் என அவர் தெரிவித்தார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# பிளாஸ்டிக் பயன்பாடு ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு பேரணி நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்




மயிலாடுதுறை, பிப்.3

மயிலாடுதுறை மாவட்டம், செனியநல்லூர் அரசு தொடக்கப் பள்ளியில் பிளாஸ்டிக் பயன்பாடு ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்கள் அரவிந்த், ஞான சூரியன், மணி முருகன், லோகேஷ் வர்மா ஜகநாத், பிரவீன் பிரசாந்த், ரமணா மற்றும் யகவா குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, தொடக்கப் பள்ளி மாணவர்களுடன் இணைந்து கிராமத்தின் முக்கிய சாலைகளில் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இந்த பேரணியின் மூலம் பொதுமக்களுக்கு பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்க்க வேண்டும், சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்பதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கை, வேளாண் மாணவர்கள் மேற்கொண்டு வரும் கிராமப்புற வேளாண் பணிப் பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டது.

# ரோஜா - மல்லிகையில் வேப்பெண்ணெய் தெளிப்பு குறித்து செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, பிப்.3

மதுரை வேளாண் கல்லூரி மாணவி கா.அனிசா, ரோஜா-மல்லிகையில் வேப்பெண்ணெய் தெளிப்பு குறித்து செயல்முறை விளக்கமளித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் அமைந்துள்ள அக்ரகாரப்பட்டி கிராமத்தில் ஜனவரி 27ம் தேதி அன்று மல்லிகை சாகுபடியில் இலை வலைப்புழு தாக்குதல் காரணமாக இலைகள் சேதம் அடைந்து பூ உற்பத்தி மற்றும் தரம் குறைவதாக விவசாயிகள் தெரிவித்து வருகின்றனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மண் மாதிரி எடுக்கும் முறைகள் குறித்து செயல் விளக்கமளித்த வேளாண் மாணவர்கள்

நாமக்கல், பிப்.3

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள், தங்களின் களப் பயிற்சியின் ஒரு பகுதியாக எலச்சிப் பாளையம் பகுதியில் உள்ள விவசாயி அன்பரசை நேரில் சந்தித்து, மண் பரிசோதனை செய்வதின் அவசியம் குறித்து விரிவான விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



மண் பரிசோதனை செய்வதன் மூலம் பயிர் வளர்ச்சி மற்றும் உற்பத்தி திறனை அதிகரித்து அதிக மகசூல் பெற முடியும் என்பதை விளக்கம் அளித்தனர்.

மண்ணின் தன்மை, ஊட்டச்சத்து நிலை ஆகியவற்றை அறிந்து அதற்கேற்ற உர மேலாண்மை மேற்கொள்வதன் மூலம் செலவைக் குறைத்து, நீண்டகால நில வளத்தை பாதுகாக்க முடியும் என விளக்கினர்.

மேலும், சரியான மண் மாதிரி எடுக்கும் முறை, மாதிரி எடுக்க வேண்டிய இடங்கள், எடுக்க வேண்டிய ஆழம், மாதிரி சேகரிப்பு நடைமுறைகள் மற்றும் ஆய்வகத்திற்கு அனுப்பும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த களப்பயிற்சியானது விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், அறிவியல் அடிப்படையிலான வேளாண் நடைமுறைகளை பின்பற்ற ஊக்கமளிப்பதாக அமைந்தது.

# கோகோ பயிரில் அணில் மேலாண்மை குறித்து செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி

மதுரை, பிப்.3

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டாரத்தைச் சேர்ந்த கைலாசப் பட்டி கிராமத்தில் கோகோ (Cocoa) பயிரில் அணில்கள் ஏற்படுத்தும் சேதத்தை குறைக்கும் வகையில் உயிர் வலை (Live Trap) பயன்படுத்தி அணில்களை கட்டுப்படுத்தும் முறையை விளக்கும் செய்முறை விளக்கக் காட்சி நடைபெற்றது.



இந்த செய்முறை விளக்கத்தை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை மாணவி வைஷ்ணவி கிராம வேளாண் பணிப்பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தினார். இதில் 7 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்னர். விளக்கக் காட்சியின் போது, கோகோ தோட்டத்தில் அணில்கள் அதிகம் நடமாடும் இடங்களை கண்டறிந்து, சரியான இடங்களில் உயிர் வலை அமைக்கும் முறை, வலையில் பயன்படுத்த வேண்டிய ஈர்ப்பூட்டும் உணவுப் பொருட்கள், வலை பராமரிப்பு மற்றும் பாதுகாப்பான முறையில் அணில்களை பிடித்து வனப்பகுதிகளில் விடுவிக்கும் நடைமுறைகள் குறித்து தெளிவாக எடுத்துரைக்கப் பட்டது. இந்த முறையை பின்பற்றுவதன் மூலம் கோகோ காய் களுக்கு ஏற்படும் சேதம் குறைந்து, பயிர் உற்பத்தி பாதுகாக்கப்படும் என வைஷ்ணவி தெரிவித்தார். மேலும், இந்த முறை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாததும், மனிதநேயமான அணில் மேலாண்மை முறையாகவும் இருப்பதாக விளக்கினார். கலந்து கொண்ட விவசாயிகள் இந்த தொழில்நுட்பம் எளிமையானதும் பயனுள்ளதாகவும் இருப்பதாக தெரிவித்தனர். இந்த செய்முறை விளக்கக் காட்சி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

# வீட்டுத்தோட்டம் அமைக்கும் முறை / பராமரிக்கும் முறைகளை எடுத்துரைத்த கல்லூரி மாணவிகள்



திருவள்ளூர், பிப்.3

திருவள்ளூர் மாவட்டம், வேலக்காபுரம் கிராமத்தில் தொன் பொஸ்கோ வேளாண்மை கல்லூரி மாணவிகள் கிராமப்புற அனுபவப் பயிற்சி திட்டத்தின் படி அந்த கிராம மக்களுக்கு IRCDS-NGO உடன் இணைந்து காடு வளர்ப்பு, மற்றும் மரக்கன்று நடுதல், காடு வளர்ப்பு முக்கியத்துவம், பயன்கள், காற்று மாசுபாடு குறைப்பு, சுற்றுசூழல் மேம்பாடு உள்ளிட்ட தகவல்களை கூறினர்.

மேலும் வீட்டுதோட்டம் அமைக்கும் முறைகளையும், பராமரிக்கும் முறைகளையும், இயற்கை பூச்சிக் கொல்லி ஆகியவற்றை பயன்பெறும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும் தயாரிப்பு முறைகளை தெளிவாக விளக்கம் அளித்தனர்.

# எண்ணெய் உற்பத்தி ஆலையை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாமக்கல், பிப்.3

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரியின் இறுதி ஆாண்டு மாணவர்கள், எலச்சிப்பாளையம் வட்டாரத்தில் செயல் பட்டு வரும் நற்பவி ஆயில் மில்லை நேரில் பார்வையிட்டனர். அப்போது, மாணவர்கள் நிறுவனத்தின் உரிமையாளரை சந்தித்து விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.






இங்கு கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட சமையல் எண்ணெய்களின் உற்பத்தி முறைகள், தர நிலை பராமரிப்பு, சந்தை விலை நிலவரம், மூலப்பொருள் கொள்முதல் மற்றும் விற்பனைச் சவால்கள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. மேலும், பாரம்பரிய முறைகளுடன் இணைந்து நவீன தொழில் நுட்பங்களின் உதவியுடன் எண்ணெய் தயாரிப்பதில் பின்பற்றப் படும் சுத்தம், தரக் கட்டுப்பாடு மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையை உருவாக்கும் நடைமுறைகள் குறித்தும் நிறுவன உரிமையாளர் எடுத்துரைத்தார்.

இந்த தொழில்துறை பார்வை மூலம், வேளாண் உற்பத்தி, மதிப்புக் கூட்டல் தொழில்கள் மற்றும் சந்தை சார்ந்த நடைமுறைகள் குறித்து மாணவர்களுக்கு நேரடி அனுபவம் கிடைத்தது.

## நீல நிற ஒட்டும் பொறி குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடல் நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.3

நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் விவசாயி மாணவிகள் சந்திப்பின் போது பூச்சித் தாக்குதலுக்கு தீர்வு காணப்பட்டது. இது குறித்து மாணவிகள் தெரிவித்ததாகது, நாங்கள் விவசாயி வாசணை சந்தித்தோம். வெங்காய வயலுக்குச் சென்றதில் பூச்சித் தாக்குதல் பற்றி அவர் கூறினார். நாங்கள் ஒரு தீர்வாக, நீல நிற ஒட்டும் பொறி பற்றி தெரிவித்தோம். இந்த பொறியில் ஆமணக்கு எண்ணெய், கிரீஸ் அல்லது வேப்ப எண்ணெய் தடவி, பூச்சிகளை ஈர்க்கலாம். பூச்சிகள் நீல நிறத்திற்கு ஈர்க்கப்படுகின்றன, மேலும் நாமே இந்த பொறியை தயாரிக்கலாம்.நீல நிற ஒட்டும் பொறி, திரிப்ஸ் (Frankliniella occidentalis and Thrips tabaci) மற்றும் Sciarids கட்டுப்படுத்தவும் கண்காணிக்கவும் ஒரு நச்சுத்தன்மையற்ற வழி. இந்த பூச்சிகள் தனித்துவமான நீல நிறத்திற்கு ஈர்க்கப்பட்டு, பொறியில் ஒட்டிக்கொள்கின்றன. பல விவசாயிகளுக்கு இது உதவியாக இருக்கும். வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இதை வாங்கலாம்.

# SPAC ஸ்டார்ச் தயாரிப்பு நிறுவனத்தை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்




நாமக்கல், பிப்.3

நாமக்கல் மாவட்டத்தில் இயங்கி வரும் பிஜிபி வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள் ஈரோடு மாவட்டம், பூனாட்சி கிராமத்தில் அமைந்துள்ள SPAC ஸ்டார்ச் புரொடக்ட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு கல்வி பயணமாகச் சென்று பார்வையிட்டனர். அங்கு நிறுவனத்தின் Senior Executive - HR ஜான்சன் குமார் மாணவர்களை சந்தித்து, நிறுவனத்தின் செயல்பாடுகள், மரவள்ளிக் கிழங்கு மற்றும் மக்காச்சோளம் அடிப்படையிலான ஸ்டார்ச் மற்றும் மாற்றியமைக்கப்பட்ட ஸ்டார்ச் தயாரிப்பு முறைகள், பயன் படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்துறை செயல்முறைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தார்.

1997ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்நிறுவனம், பல்வேறு மதிப்பு உயர்த்தப்பட்ட ஸ்டார்ச் தயாரிப்புகளை உற்பத்தி செய்து, நூல், காகிதம், மருந்து, உணவு மற்றும் ஒட்டுநீர் தொழில்கள் உள்ளிட்ட பல துறைகளில் சேவை வழங்கி வருவது குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்த தொழில்துறை கல்வி பயணம், வேளாண் மூலப்பொருட் களின் மதிப்பு உயர்த்தல், தொழில்துறை நடைமுறைகள், சந்தை தேவைகள் மற்றும் வேலைவாய்ப்பு வாய்ப்புகள் குறித்து மாணவர் களுக்கு பயனுள்ள தகவல்கள் மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

# தேங்காயில் சுண்ணாம்பு ஸ்வாபிங் முறை குறித்து செயல் விளக்கம் அளித்த வேளாண் கல்லூரி மாணவி

மதுரை, பிப்.3

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவி மீ.குருசங்கீதா தனது கிராமப் புற வேளாண் பணி அனுபவம் (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக தேனி மாவட்டம், போடிநாயனூர் வட்டாரம், மேலச்சொக்கநாதபுரம்



கிராமத்தில் தேங்காயில் சுண்ணாம்பு பயன்படுத்தி ஸ்வாபிங் செய்வது குறித்த செயல்விளக்கம் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தேங்காய் மரங்களில் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப் படுத்தவும், மரங்களின் ஆரோக் கியத்தை மேம் படுத்தவும் சுண்ணம்பு ஸ்வாபிங் முறை எவ்வாறு பயன்படுகிறது என்பதைக் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக விளக்கப்பட்டது. மேலும் சுண்ணாம்பு பேஸ்ட் தயாரிக்கும் முறை ஸ்வாபிங் செய்ய வேண்டிய சரியான இடங்கள் மற்றும் நேரம் பற்றியும் செய்முறை விளக் கத்துடன் எடுத்துரைக்கப்பட்டது. இச்செயல்விளக்கத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று, இம் முறையை தங்கள் தோட்டங்களில் பின்பற்றுவதற்கான பயனுள்ள தகவல்களைப் பெற்றனர்.

# கிராமப்புற விவசாயப் பணி அனுபவத்திட்ட விழா தொடக்கம்



நாமக்கல், பிப்.3

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம் அடுத்த துத்திக்குளம் கிராமத்தில் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள் சார்பில் வேளாண் பணி அனுபவ பயிற்சி மற்றும் விவசாய பணி அனுபவ திட்ட தொடக்க விழா நடைபெற்றது. இவ்விழாவில் ஆத்மா குழு தலைவர் அசோக்குமார், ஆத்மா குழு உறுப்பினர் தனபால், முருகேசன் (கவுன்சிலர்) ஆகியோர் பங்கேற்றனர். மற்றும் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியின் முதல்வர் N.O.கோபால், தொடங்கி வைத்து பேசினார். விழாவில் அக்கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு அப்பகுதி விவசாயிகளுக்கு வேளாண் மானியங்கள், இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவங்கள், வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை நிறுவனங்கள், குறைந்த செலவில் அதிக மகசூல் பெறும் தொழில்நுட்பம், உயிர் உரங்கள் மற்றும் அவற்றின் பயன்களை பற்றி விளக்கம் அளித்தனர். அங்கு வருகை புரிந்த விவசாயிகள் அனைவருக்கும் ஆடாதோடா மரக்கன்று மற்றும் தோட்டக்கலை விதைகளை வழங்கினர். இதில் அப்பத்தியைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள், வேளாண் உதவி இயக்குனர் மலர்க்கொடி மற்றும் துணை வேளாண் அலுவலர் ஹென்றி சார்லஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.